கதர் துணி கொள்முதல்

*257. வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1969-70, 1970-71 ஆம் ஆண்டுகளில் மட்டும் கதர் வாரியம், சென்னை கிராமோத்யோக் பவனிலிருந்து வாங்கிய கதரின் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1969-70-இல் ரூ. 3,13,691-க்கும், 1970-71-இல் ரூ. 9,01,766-க்கும் வாங்கியிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியம் வாங்கக்கூடிய பொருள்களை நமது மாநிலத்திலேயே வாங்கிக்கொள்ளாது, பம்பாயில் உள்ள கிராமோத்யோக் பவனில் இருந்து வாங்கவேண்டிய அவசியம் என்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கிருந்து வாங்குவது நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படாத மட்டரக நூல்களினால் செய்யப்படும் விரிப்புகள், பட்டுச் சேலைகள், கம்பளிகள் போன்றவைதான். கிராமோத்யோக் பவன் என்பது மத்திய அரசாங்கத்தினால் நடத்தப்படுகிற ஒன்று. பம்பாயில் தலைமையகம் இருக்கிறது. அதன் உதவியைக்கொண்டே தான் நமது மாநிலத்திலும் கதர் கிராமத் தொழில் வாரியமே நடைபெறுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம தொழில் கூட்டுறவு பயிற்சிப்பள்ளி

*258. வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள தொழில் கூட்டுறவு பயிற்சி பள்ளியை மூடிவிட கதர் வாரியம் முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ? பம்பாய் கதர் கமிஷன் இதற்காக எவ்வளவு பணம் தருகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை. 1971-72-க்கு மானியமாக இப் பயிற்சிப் பள்ளிக்கு ரூ. 65,600 வழங்கியுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : இந்தத் தொழில் நிறுவனம் நடைபெற இன்னும் அதிகமான மானியத்தைப் பெற முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது தொழில் நிலையம் அல்ல, பயிற்சி நிலையம். இப்போது கொடுக்கப்படுகிற மானியம் போதுமானதாக இருக்கிறது. கூட்டுறவுத்துறையில் இன்னொரு பயிற்சி நிலையம் நடைபெறுகிறது. இதையும் இணைப்பதன் மூலம் சிக்கனமாக நடைபெற முடியும்.